ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (10.ச்ருங்கார பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

251. சௌரே: ச்ருங்கார சேஷ்டாநாம் ப்ரஸூதிம் பாதுகாம் பஜே
யாம் ஏஷ புங்க்தே சுத்தாந்தாத் பூர்வம் பச்சாத் அபி ப்ரபு:

**பொருள்** – பெரியபெருமாளின் ச்ருங்கார ரஸத்திற்கு ஏதுவாக உள்ள பாதுகையை நான் வணங்குகிறேன். பாதுகை எவ்விதம் ஏதுவாக உள்ளது என்றால் - அவன் அந்தப்புரம் செல்வதற்கும், அங்கிருந்து மீண்டு வருவதற்கும் பாதுகையைச் சாற்றிக் கொண்டு அல்லவோ செல்கிறான்?

252. ப்ரணத த்ரிதசேந்த்ர மௌளிமாலா மகரந்த அர்த்ர பராக பங்கிலேந
அநுலிம்பதி பாதுகே ஸ்வயம் த்வாம் அநுரூபேண பதேந ரங்கநாத:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தேவர்கள் அனைவரும் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் தலை சாய்த்து வணங்குகின்றனர். அப்போது அவர்கள் அணிந்துள்ள மாலைகளில் உள்ள தேன், அவனது திருவடிகளில் உள்ள தூசிகளுடன் கலந்து, சேறு போன்று ஆகிறது. இப்படிப்பட்ட உயர்ந்த திருவடிச் சேற்றை உன் மீது சந்தனம் போன்று ஸ்ரீரங்கநாதன் எப்போதும் பூசுகிறான் (நாயகன் நாயகிக்கு சந்தனம் பூசுவதைக் கூறுகிறார்).

253. அவதாத ஹிமாம் ஸுக அநுஷக்தம் பதரக்ஷே த்வயி ரங்கிண கதாசித்
கிம் அபி ஸ்திதம் அத்வதீய மால்யம் விரளாவஸ்தித மௌக்திகம் ஸ்மராமி

**பொருள்** - ஒரு நேரத்தில் ஸ்ரீரங்கநாதன் வெளுத்த ஈர வஸ்திரத்துடனும், நெருக்கம் இல்லாமல் அங்கும் இங்குமாக உள்ள முத்துமாலையுடனும் அழகாக உன் மீது எழுந்தருளியிருப்பான். அப்போது அவன் திருவடிகளில் மலர்மாலையும் சாற்றப்பட்டிருக்கும். இதனைக் காணும்போது, சந்தனப் பூச்சிற்குப் பின்னர் (கடந்த ச்லோகம் காண்க) உனக்கு இடப்பட்ட மாலை என்றே நான் எண்ணுகிறேன்.

254. அஸஹாய க்ருஹீத ரங்கநாதாம் அவரோதாங்கணஸீம்நி பாதுகே த்வாம்
ஸுத்ருஸ: ஸ்வயம் அர்ச்சயந்தி தூராத் அவதம் ஸோத்பல வாஸிதை: அபாங்கை:

**பொருள்** – நம்பெருமாளின் பாதுகையே! நம்பெருமாள் உன்னைத் தனது திருவடிகளில் சாற்றிக் கொண்டு அந்தப்புரத்திற்குச் செல்கிறான். அப்போது அங்குள்ள பெண்கள் செய்வதென்ன? அவர்கள் தங்கள் காதுகளில் அலங்காரமாக வைத்துள்ள நெய்தல் மலரின் நறுமணம் நிறைந்த கண்களால் உன்னைத் தங்கள் கடைக்கண் பார்வை கொண்டு பார்த்து

வணங்கி நிற்கின்றனர் (இங்கு நாயகனான நம்பெருமாளுடன் வரும் ப்ரதான நாயகியாக பாதுகை கூறப்பட்டது காண்க).

255. நிர்விச்யமாநம் அபி நூதந ஸந்நிவேசம்
கைவல்ய கல்பித விபூஷண காயகாந்திம்
காலேஷு நிர்விசஸி ரங்கயுவாநம் ஏகா
ச்ருங்கார நித்ய ரஸிகம் மணிபாதரக்ஷே

**பொருள்** - இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! எத்தனை அனுபவித்தாலும் புதியவனாகவே ஸ்ரீரங்கநாதன் உள்ளான். அத்தனை அழகான திவ்யமான திருமேனி கொண்டவனாக உள்ளான். எந்தவித ஆபரணங்களும் அணியாமல் இருக்கின்ற போதும், ஆபரணங்கள் அணித்தவன் போலத் தோன்றுகிறான். இவ்விதமாக அந்தந்த காலகட்டங்களில் நீ அவனுடனே இருந்து கொண்டு அவனைத் தனியாக அனுபவித்தபடி உள்ளாய்.

256. நித்ராயிதஸ்ய கமிது: மணிபாதுகே த்வம்
பர்யங்கிகா பரிஸரம் ப்ரதிபத்யமாநா
ச்வாஸாநில ப்ரசலிதேந புஜஸ்ய பீக்ஷ்ணம்
நாபீ ஸரோஜரஜஸா நவம் அங்கராகம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப் பெற்ற பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் கட்டிலில் உறங்கிக் கொண்டிருக்கிறான். அப்போது அவன் கட்டிலில் அருகில் நீ உள்ளாய். அவன் விடும் மூச்சுக்காற்றில், அவனது நாபிக்கமலத்தில் உள்ள மகரந்தத் துளிகள் உன் மீது வந்து படிந்தபடி உள்ளன. இவ்விதம் உனக்கு சந்தனப் பூச்சு நடைப்பெறுகிறது போலும்.

257. சயிதவதி ரஜந்யாம் பாதுகே ரங்கபந்தௌ
சரணகமல பார்ச்வே ஸாதரம் வர்த்தஸே த்வம்
பணிபதிசயநீயாத் உத்திதஸ்ய ப்ரபாதே
ப்ரதமநய பாதம் பாவநம் ப்ராப்து காமா

**பொருள்** – பெரியபெருமாளின் பாதுகையே! பெரியபெருமாள் இரவில் தனது படுக்கையில் சயனித்துள்ளபோது, தாமரை மலர் போன்ற அவனது அழகான திருவடிகளின் அருகிலேயே நீ உள்ளாய். ஏன் என்றால் - பெரியபெருமாள் காலைப்பொழுதில் தனது ஆதிசேஷன் என்ற படுக்கையில் இருந்து துயில் எழும்போது,

அவனது முதல் பார்வையை நீ பெற்றுவிட வேண்டும் என்ற ஆசை காரணமாக அல்லவோ?

258. சரணகமல ஸங்காத் ரங்கநாதஸ்ய நித்யம்
நிகமபரிமளம் த்வம் பாதுகே நிர்வமந்தீ
நியதம் அதிசயாநா வர்த்தஸே ஸாவரோதம்
ஹ்ருதயம் அதிவஸந்தீம் மாலிகாம் வைஜயந்தீம்

**பொருள்** – அழகியமணவாளனின் பாதுகையே! பெரியபெருமாளின் திருமார்பில் உள்ள மஹாலக்ஷ்மியுடன் தொடர்பு கொண்டுள்ளதால், அவன் அணிந்துள்ள வைஜயந்தி என்கிற மாலைக்கு நறுமணம் அதிகமே ஆகும். ஆயினும் அவனது திருவடிகளின் தொடர்பு உனக்கு மட்டுமே அல்லவா உள்ளது? இதன் மூலம் நீ எப்போதும் வேதங்களின் நறுமணத்தை பரப்பியபடி உள்ளாய். ஆக ஸ்ரீரங்கநாச்சியாரின் தொடர்பு பெற்ற அந்த மாலையை விட, அவனது திருவடிகளின் தொடர்பு பெற்ற நீ உயர்ந்தே உள்ளாய்.

259. உபநிஷத் அபலாபி: நித்யம் உத்தம்ஸநீயம்
கிம் அபி ஜலதிகந்யா ஹஸ்த ஸம்வாஹநார்ஹம்
தவ து சரணரக்ஷே தேவி லீலாரவிந்தம்
சரண ஸரஸிஜம் தத் சாரு சாணூரஹந்து:

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உபநிஷத்துக்கள் என்னும் பெண்கள், பெரியபெருமாளின் திருவடித் தாமரைகளைத் தங்கள் தலைகளில் சூட்டிக் கொள்கின்றனர். திருப்பாற்கடலில் அவதரித்த மஹாலக்ஷ்மி அந்த திருவடிகளைத் தனது திருக்கைகளால் பிடித்தபடி உள்ளாள். சாணுரனை மாய்த்த க்ருஷ்ணனாகிய பெரியபெருமாளின் திருவடிகள், உனக்கு ஒரு விளையாட்டுப் பொருளாக உள்ள தாமரையாக உள்ளது.

260. அகிலாந்த: புரவாரேஷு அநேகவாரம் பதாவநி ஸ்வைரம்
அநுபவதி ரங்கநாத: விஹாரவிக்ராந்தி ஸஹசரீம் பவதீம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் தனது அந்தப்புரங்களில் நுழைவதற்கு “இந்த இந்த நாள், இந்த இந்த அறை” என்று முறை வைத்துள்ளான். ஆனால் உன்னை மட்டும் அவன் எப்போதும் விடாமல் உல்லாஸ நடையில் அனுபவித்தபடி உள்ளான்.


**Email:**sridharan_book@yahoo.co.in

ச்ருங்கார பத்ததி ஸம்பூர்ணம்

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
ச்ருங்கார பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்